

3

# சமூக அறிவியல்

## பருவம்–2

3rd Social Science Unit 1 Term II.indd 1 8/21/2019 2:20:43 PM

# பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் | 73 |
| 2 | சரணாலயங்கள் | 86 |
| 3 | மாவட்ட நிருவாகம் | 99 |


F1K9A4

மின்னூல்

D8C8J2

மதிப்பீடு

B317_3_SOCIAL_TM

இணைய வளங்கள்






3rd Social Science Unit 1 Term II.indd 2 8/21/2019 2:20:47 PM

அலகு 1

# வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்

## கற்றல் நோக்கங்கள்



மாணவர்கள் இப்பாடத்தைக் கற்பதன் வாயிலாக,

❖ தமிழ்நாட்டில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பட்டியலிடுவர்.

❖ படத்தைப் பார்த்து ஊரின் பெயரைக் கூறுவர்.

❖ ஒவ்வொரு வரலாற்று இடமும் ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளது என்பதனை அறிந்துகொள்வர்.

H2A9R1

பள்ளிச் சிறுவனான **சந்துரு** தன் செயல் திட்டப் பணிக்காக பட அட்டைகளும், வண்ண எழுதுகோல்களும் வாங்க எழுதுபொருள்கள் விற்பனையகத்திற்குச் சென்றான்.



சந்துருவுக்கும் **கடைக்காரருக்கும்** இடையே நிகழும் உரையாடலைக் காண்போம்.





3rd Social Science Unit 1 Term II.indd 73 8/21/2019 2:20:53 PM




**சந்துரு:** மாமா, உங்களிடம் வண்ண எழுதுகோல்கள் உள்ளனவா?

**கடைக்காரர் :** உள்ளன.

சந்துரு கடையைச் சுற்றிப் பார்க்கிறான். சுவரில் பல்வேறு வரைபடஅட்டைகள் தொங்கிக் கொண்டிருப்பதையும் காண்கிறான்.

**சந்துரு :** மாமா, இவ்வரைபடத்தில் என்னவெல்லாம் இருக்கின்றன?

**கடைக்காரர் :** இந்த வரைபடத்தில் தமிழ்நாட்டில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் உள்ளன.

**சந்துரு :** வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் என்றால் என்ன?

**கடைக்காரர் :** பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட கட்டடங்கள், சிலைகள் மற்றும் பல கலை பொருள்கள் கொண்டுள்ள இடங்களை வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் என்கிறோம். அரசாங்கம் அவற்றைக் கவனமாக பாதுகாக்கிறது. எனவே, நம்மால் அவற்றைப் பற்றி அறிய முடிகிறது.



3rd Social Science Unit 1 Term II.indd 74 8/21/2019 2:20:59 PM



சந்துரு ஒரு வரை படத்தைச் சுட்டிக்காட்டுகிறான்.



கடற்கரைக் கோவில்



பாண்டவர் ரதங்கள்

**சந்துரு:** நான் என் பெற்றோருடன் **மகாபலிபுரத்திற்குச்** சென்றிருக்கிறேன். இந்த இடம் சென்னைக்கு அருகில் உள்ளது.

**கடைக்காரர் :** ஆம். அது நான்கு வகையான கட்டடக் கலைகளைக் (Architecture) கொண்டுள்ளன.

**சந்துரு:** அப்படியா! அவற்றைக் கட்டியது யார்?

**கடைக்காரர் :** **பல்லவர்கள்** அதனைக் கட்டினார்கள்.

**சந்துரு:** என் அம்மா என்னிடம் அங்குள்ள பல்வேறு **நினைவுச் சின்னங்கள்** (Monuments) ஒரே கல்லினால் கட்டப்பட்டுள்ளன என்பதனைக் கூறியுள்ளார்கள்.

**கடைக்காரர் :** ஆம் . மிகவும் சரி.


I6M5W2



3rd Social Science Unit 1 Term II.indd 75 8/21/2019 2:21:09 PM

**கடைக்காரர் :** கடற்கரைக் கோவில் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது என்று உனக்குத் தெரியுமா?

**சந்துரு :** தெரியவில்லையே .



**கடைக்காரர் :** அது வங்காள விரிகுடாவை நோக்கிக் கடற்கரையில் அமைந்துள்ளதால் கடற்கரைக் கோவில் என அழைக்கப்படுகிறது.

**சந்துரு :** ஓ! அப்படியா ! சாலச் சிறந்தது.

**நாம் அறிந்து கொள்வோம்.**

**மகாபலிபுரத்தில் உள்ள கோவில்கள்** மூன்று தலைமுறை பல்லவ மன்னர்களால் கட்டப்பட்டுள்ளன. இவ்வகை கோவில்களைக் கட்டுவதற்கு ஏறக்குறைய 200 ஆண்டுகள் ஆயின.

**செயல்பாடு**
**நாம் எழுதுவோம்**

நீ கண்டு களித்த ஏதேனும் 5 இடங்களின் பெயர்களை எழுதுக. அவற்றுள் ஏதேனும் ஓர் இடத்தின் புகைப்படத்தை ஒட்டுக.

______________________

______________________

______________________

______________________

______________________



3rd Social Science Unit 1 Term II.indd 76 8/21/2019 2:21:10 PM

சந்துரு மற்றொரு படத்தைச் சுட்டிக்காட்டுகிறான்.







**சந்துரு :** புனித ஜார்ஜ் கோட்டை எங்குள்ளது?

**கடைக்காரர் :** சென்னையில்தான் உள்ளது. இது, ஆங்கிலேயர்களால் முதன்முதலாக இந்தியாவில் கட்டப்பட்ட கோட்டை ஆகும்.


**சந்துரு :** கோட்டையினுள் என்னவெல்லாம் உள்ளன?


**கடைக்காரர் :** அருங்காட்சியகமும் (Museum),தேவாலயமும் கோட்டையினுள் உள்ளன. தமிழக அரசின் தலைமைச் செயலகமும் கோட்டையினுள் தான் உள்ளது.

**சந்துரு :** எனக்கு அருங்காட்சியகம் செல்ல மிகவும் பிடிக்கும். நான் நிச்சயமாகக் கோட்டையையும் சென்று பார்ப்பேன்.

**கடைக்காரர் :** நீ கட்டாயம் சென்று வர வேண்டும்.

கடைக்காரர் மற்றொரு படத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.


திருவள்ளுவர் உருவச்சிலை


விவேகானந்தர் பாறை

**கடைக்காரர் :** இப்படத்தைப் பார். இது யாருடைய உருவச்சிலை என்று உனக்குத் தெரியுமா?

**சந்துரு :** இது **திருவள்ளுவரின் உருவச்சிலை.** அவர்தாம் சிறப்புமிக்க **திருக்குறளை** இயற்றினார்.

**கடைக்காரர் :** ஆம் . சரியாகச் சொன்னாய்.

**சந்துரு :** இந்தச் சிலை எங்கு உள்ளது?

**கடைக்காரர் :** இது **கன்னியாகுமரியில்** உள்ளது.

**சந்துரு :** இந்தச் சிலை மிகவும் உயரமாக உள்ளது .

**கடைக்காரர் :** ஆம் இது 133 அடி. உயரம் கொண்டது. இது உனக்கு எதை நினைவுபடுத்துகிறது?

**சந்துரு :** திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டுள்ளது.



3rd Social Science Unit 1 Term II.indd 78 8/21/2019 2:21:13 PM

**கடைக்காரர் :** மிக நன்று. இந்தச் சிலையின் உயரம் திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கையைத்தான் குறிப்பிடுகிறது.

**சந்துரு :** இச்சிலையை சுற்றியுள்ள கடலின் பெயர் என்ன?

**கடைக்காரர் :** இச்சிலை அமைந்துள்ள பாறையை அரபிக் கடல், இந்தியப் பெருங்கடல் ,வங்காள விரிகுடா ஆகிய மூன்று நீர்ப்பரப்புகள் சூழ்ந்துள்ளன.

**சந்துரு :** ஆ! இச்சிலை கம்பீரமாக உள்ளது!

## செயல்பாடு

நாம் விவாதித்து எழுதுவோம்



நினைவுச் சின்னங்களில் பெயர்கள் மற்றும் ஓவியங்களை மக்கள் கிறுக்கி வைத்துள்ளதைக் கண்டதுண்டா? இது சரி என்று உனக்கு தோன்றுகிறதா? உன் கருத்துகளை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________



3rd Social Science Unit 1 Term II.indd 79 8/21/2019 2:21:15 PM

சந்துரு மற்றொரு படத்தைச் சுட்டிக்காட்டுகிறான்.







**சந்துரு :** இந்தக் கோவிலின் பெயர் என்ன?

**கடைக்காரர் :** இதுதான் புகழ் வாய்ந்த தஞ்சாவூர் பெரிய கோவில். இது பிரகதீஸ்வரர் ஆலயம் என்றும் அழைக்கப்படுகிறது

**சந்துரு :** இதனைக் கட்டியது யார்?

**கடைக்காரர் :** இக்கோவிலை இராஜராஜ சோழன் கட்டினார். இக்கோவிலில் உள்ள நந்தி ஒரே கல்லினால் ஆனது என்று உனக்குத் தெரியுமா?

**சந்துரு :** அப்படியா?

**கடைக்காரர் :** ஆம். இக்கோவிலின் மற்றொரு சிறப்பு அம்சம் என்னவெனில் கோவிலின் கோபுர நிழல் தரையில் விழுவதில்லை.

**சந்துரு :** ஆச்சரியமாக உள்ளது! இவற்றைப் பார்க்க மிகவும் ஆர்வமாக உள்ளது. நான் அங்கு சென்று வரப் போகிறேன்.



3rd Social Science Unit 1 Term II.indd 80 8/21/2019 2:21:18 PM

**கடைக்காரர் :** ஆமாம், நீ சென்று அவ்விடத்தை காண வேண்டும். நான் சிறுவனாக இருந்த பொழுது அவ்விடத்திற்குச் சென்று வந்துள்ளேன். மீண்டும் அவ்விடத்தைக் காண ஆவலாக உள்ளது.



## சிந்தனை செய்



நினைவுச் சின்னம் அல்லது கோவில்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களை நீ கண்டதுண்டா?

## செயல்பாடு

**நாம் விவாதித்து எழுதுவோம்**

உன் நண்பர்களுடன் விவாதித்து தமிழ்நாட்டில் உள்ள உங்களுக்குப் பிடித்தச் சுற்றுலாத் தலங்கள் பற்றி எழுதுக.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________



3rd Social Science Unit 1 Term II.indd 81 8/21/2019 2:21:18 PM


செஞ்சிக்கோட்டை

**சந்துரு :** இந்த வரைபடத்தின் இறுதியில் உள்ள படம் கோட்டை போன்று உள்ளதே.


**கடைக்காரர் :** ஆம் நீ கூறுவது சரி. இக்கோட்டை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக்கோட்டை ஆகும்.

**சந்துரு :** ஓஹோ! அப்படியா!

**கடைக்காரர் :** ஆம். தமிழ்நாட்டில் உள்ள பழங்காலக் கோட்டைகளுள் இதுவும் ஒன்று.

**சந்துரு :** நான் மலைக்குன்றுகளைக்கூட இப்படத்தில் காண்கிறேன். எனக்கு செஞ்சிக்கோட்டை செல்ல விருப்பமாக உள்ளது.


இராஜா கோட்டை, செஞ்சி


இராணி கோட்டை, செஞ்சி

**கடைக்காரர் :** நாம் அனைவரும் இவ்விடங்களைச் சென்று காண வேண்டும். ஏனெனில், இவற்றிற்கு மிகப்பெரிய வரலாற்றுப் பின்னணி உண்டு. நாம் இவற்றை எண்ணிப் பெருமை கொள்வோம்.



3rd Social Science Unit 1 Term II.indd 82 8/21/2019 2:21:20 PM



**கடைக்காரர் :** நன்று. தமிழ்நாட்டு வரலாற்றுச் சின்னங்கள் உள்ள படஅட்டை மற்றும் எழுதுகோல்களைப் பெற்றுக் கொள்.



**சந்துரு :** நான் இவ்வரைபடங்களை என் வீட்டில் தொங்க விடுவேன். இவற்றைப் பற்றி என் நண்பர்களுடன் உரையாடுவேன். நன்றி, மாமா!



## கலைச் சொற்கள்

**Architecture** : **கட்டடக் கலை**

**Monuments** : **நினைவுச் சின்னங்கள்**

**Museum** : **அருங்காட்சியகம்**



## மீள்பார்வை

- ஒவ்வொரு நினைவுச் சின்னத்திற்கும் ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு.
- மகாபலிபுரத்தில் உள்ள நினைவுச் சின்னங்கள் பல்லவர்களால் கட்டப்பட்டன.
- புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் இந்தியாவில் முதன்முதலில் கட்டப்பட்ட கோட்டை ஆகும்.
- திருவள்ளுவர் உருவச்சிலை கன்னியாகுமரியில் உள்ளது.
- தஞ்சாவூரிலுள்ள பெரிய கோவில் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டது.
- செஞ்சிக்கோட்டை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளது.



3rd Social Science Unit 1 Term II.indd 83 8/21/2019 2:21:20 PM



# மதிப்பீடு



M2N9H7

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1) கடற்கரைக் கோவில் அமைந்துள்ள இடம்__________.

அ) மகாபலிபுரம் ஆ) திருச்சி இ) மதுரை

2) புனித ஜார்ஜ் கோட்டை அமைந்துள்ள இடம்__________.

அ) காஞ்சிபுரம் ஆ) சென்னை இ) திருச்சி

3) மகாபலிபுரத்தில் உள்ள கட்டடக் கலைகளின் வகைகள்__________.

அ) ஆறு ஆ) மூன்று இ) நான்கு

4) திருவள்ளுவர் __________ இயற்றினார்.

அ) திருக்குறள் ஆ) நன்னெறி இ) ஆத்திசூடி

5) தஞ்சாவூர் பெரிய கோவிலில் உள்ள நந்தி__________ஆல் கட்டப்பட்டது.

அ) அதிக கற்கள் ஆ) இரு கற்கள் இ) ஒரே கல்

**II. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1 | விவேகானந்தர் பாறை | - | புனித ஜார்ஜ் கோட்டை |
| 2 | அருங்காட்சியகம் | - | விழுப்புரம் |
| 3 | செஞ்சிக்கோட்டை | - | பல்லவர்கள் |
| 4 | மகாபலிபுரம் | - | சோழர்கள் |
| 5 | பெரிய கோவில் | - | கன்னியாகுமரி |



3rd Social Science Unit 1 Term II.indd 84 8/21/2019 2:21:23 PM

## III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. புனித ஜார்ஜ் கோட்டையினுள் அமைந்துள்ளவை யாவை?
2. திருவள்ளுவர் உருவச்சிலை பற்றிக் குறிப்பு வரைக.
3. திருவள்ளுவர் சிலையைச் சுற்றியுள்ள மூன்று நீர்ப்பரப்புகளின் பெயர்களை எழுதுக.
4. தஞ்சாவூர் பெரிய கோவிலைக் கட்டியது யார்? அக்கோவிலின் ஏதேனும் ஒரு சிறப்பு அம்சம் பற்றி எழுதுக.
5. செஞ்சிக்கோட்டை பற்றிக் குறிப்பு வரைக.

செயல்பாடு

# செயல் திட்டம்

நீ ஏதேனும் உனக்குப் பிடித்த இடத்திற்குச் சுற்றுலா சென்று வர திட்டமிடுவது போன்று கற்பனை செய்து கொள். அப்பொழுது உன்னுடன் என்னென்ன பொருள்களை எடுத்துச் செல்வாய்?

| இடத்தின் பெயர் | பொருள்களின் பெயர் |
|---|---|
| | |
| | |
| | |
| | |



3rd Social Science Unit 1 Term II.indd 85 8/21/2019 2:21:25 PM



# அலகு 2 சரணாலயங்கள்






### கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள் இப்பாடத்தைக் கற்பதன் வாயிலாக,

- இந்தியாவில் உள்ள பல்வேறு சரணாலயங்களின் பெயர்களையும் அவற்றின் அமைவிடத்தையும் அறிந்து கொள்வர்.
- சரணாலயங்கள் பற்றிக் கூறுவர்.
- படத்தைப் பார்த்து உயிர்க்கோளக் காப்பகங்களின் முக்கியத்துவத்தினை உணர்வர்.



M9G8R1




அனு, தன் தாத்தாவுடன் வீட்டில் இருக்கிறாள். அனு ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டு இருக்கிறாள். அவளது தாத்தா செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருக்கிறார்.






3rd Social Science Unit 2 Term II.indd 86 8/17/2019 2:57:22 PM



**அனு :** ச–ர–ணா–ல–ய–ம் **சரணாலயம்** (Sanctuary) என்றால் என்ன?

**தாத்தா:** **சரணாலயம்** என்பது விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடுவதில் இருந்தும் மற்ற மனித செயல்பாடுகளிலிருந்தும் பாதுகாத்து வைக்கும் இடமாகும்.

**அனு :** விலங்குகளையும், பறவைகளையும் பாதுகாக்க சரணாலயங்கள் தவிர, வேறு இடங்கள் எவையேனும் உள்ளனவா?

**தாத்தா:** ஆமாம் அனு. **தேசியப் பூங்காக்களில்** காட்டு விலங்குகள் பாதுகாக்கப்படுகின்றன. **உயிர்க்கோளக் காப்பகங்களில்** விலங்குகள், பறவைகள் மற்றும் தாவரங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

**அனு :** கேட்க ஆர்வமாக உள்ளதே!



3rd Social Science Unit 2 Term II.indd 87 8/17/2019 2:57:26 PM

J3I2B8



**தாத்தா:** நான் உனக்கு இந்தியாவில் உள்ள சில புகழ்பெற்ற சரணாலயங்கள் மற்றும் உயிர்க்கோளக் காப்பகங்கள் பற்றி கூறுகிறேன்.



**அனு :** நிச்சயமாக. எனக்கும் அவற்றைப் பற்றி அறிந்துகொள்ள விருப்பமாக உள்ளது.



**தாத்தா:** உத்தரகாண்டில் உள்ள கார்பெட் தேசிய பூங்கா மிகவும் பழைமையான பூங்கா.



**அனு :** எவ்வகையான விலங்குகள் அங்கு பாதுகாக்கப்படுகின்றன?



**தாத்தா :** கம்பீரமான வங்காளப் புலிகள் அங்கு பாதுகாக்கப்படுகின்றன.






3rd Social Science Unit 2 Term II.indd 88 8/17/2019 2:57:27 PM

**அனு :** இவற்றைத் தவிர வங்காளப் புலிகளைப் பாதுகாக்க வேறு ஏதேனும் சரணாலயம் உள்ளதா?

**தாத்தா:** ஆமாம். சுந்தரவனம் தேசியப் பூங்கா மேற்குவங்காளத்தில் உள்ளது.

**வங்காளப் புலிகள்**




- புலிகள் பாதுகாப்புத் திட்டத்தின் தொடர் பாதுகாப்பு முயற்சிகள் காரணமாக இந்தியாவில் உள்ள புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடு

நாம் எழுதுவோம்

1. பின்வருவனவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| சரணாலயம் | தேசியப் பூங்கா | உயிர்க்கோள காப்பகம் |
|---|---|---|
| | | |
| | | |

2. உனக்கு வங்காளப் புலிகளைப் பார்க்க வேண்டுமெனில் எந்த தேசியப் பூங்காவிற்குச் செல்வாய்? அப்பூங்காவின் பெயரையும் அதன் அமைவிடத்தையும் எழுதுக.



3rd Social Science Unit 2 Term II.indd 89 8/17/2019 2:57:29 PM

சிந்தனை செய்



உலகப் புலிகள் தினம் எப்பொழுது கொண்டாடப்படுகிறது?



**அனு :** தாத்தா எனக்கு யானைகள் மிகவும் பிடிக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? யானைகளைப் பாதுகாக்க ஏதேனும் சரணாலயம் உள்ளதா?





**தாத்தா:** ஆம். நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் யானைகள் மட்டுமல்லாமல் இந்தியச் சிறுத்தைப்புலி, கருஞ்சிறுத்தை மற்றும் வரையாடு போன்ற விலங்குகளும் பாதுகாக்கப்படுகின்றன.


சிறுத்தைப்புலி



வரையாடு



கருஞ்சிறுத்தை



**அனு:** தாத்தா உயிர்க்கோளக் காப்பகத்தில் தாவரங்களும் பாதுகாக்கப் படுகின்றன என நீங்கள் கூறினீர்கள். எவ்வகையான தாவரங்கள் அங்கு காணப்படுகின்றன?





**தாத்தா:** அங்கு பல்வேறு வகையான பூக்கும் தாவரங்களை நாம் காணலாம். குறிஞ்சிப் பூ அவற்றில் ஒன்று. இவ்வகை பூக்கள் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மலர்கின்றன.

குறிஞ்சிப் பூக்கள்



**அனு :** அப்படியானால் மிகவும் அழகாக இருக்குமே!





3rd Social Science Unit 2 Term II.indd 90 8/17/2019 2:57:35 PM


## செயல்பாடு
நாம் எழுதுவோம்

நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் உள்ள மூன்று விலங்குகளின் படங்களை ஒட்டி அவற்றின் பெயர்களை எழுதுக.

G5X5F5

**அனு :** பறவைகளைப் பற்றிக் கூறுங்கள், தாத்தா.

**தாத்தா :** பல்வேறு வகையான பறவைகளைக் காண வேண்டுமெனில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு நாம் செல்ல வேண்டும் .



**அனு :** அது எங்கு உள்ளது?

**தாத்தா :** செங்கல்பட்டிலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

**அனு :** அங்குத் தனித்துவம் பெற்ற பல வண்ணப் பறவைகளைக் காணலாம் என்று நான் எண்ணுகின்றேன்.



3rd Social Science Unit 2 Term II.indd 91 8/17/2019 2:57:37 PM

**தாத்தா:** ஆம் அனு. அங்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பலவகையானப் பறவைகள் இடம்பெயர்ந்து வருவதை நாம் காணலாம். கூழைக்கடா (pelicans) ,இராக்கொக்கு (night herons) மற்றும் பலவகையானப் பறவைகள் காணப்படுகின்றன.

**இடம்பெயர்தல்** : காலநிலை காரணமாக பறவைகள் அல்லது விலங்குகள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாறி வருவதை இடம்பெயர்தல் என்று கூறுகிறோம்.



**அனு :** அங்கு மயில்களைக் காண முடியுமா?

**தாத்தா:** இல்லை அனு. **திருச்சியில்** உள்ள **விராலிமலையில்** இருக்கும் இயற்கை வாழிடத்தில் நாம் மயில்களை காணலாம்.

**அனு :** எனக்கு அங்குச் சென்று மயில்களைப் பார்க்க வேண்டும் என்று விருப்பமாக உள்ளது.

## சிந்தனை செய்



இடம்பெயரும் பறவைகளுக்கும், இடம் பெயராத பறவைகளுக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றி சிந்தித்துப் பார்.

**நாம் அறிந்து கொள்வோம்.**

**வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் இந்தியாவில் உள்ள பழைமையான நீர்ப்பறவைகள் சரணாலயமாகும்.**



3rd Social Science Unit 2 Term II.indd 92 8/17/2019 2:57:39 PM

**தாத்தா:** நிச்சயமாக. நான் உனக்கு ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் பற்றிக் கூறவா?

**அனு :** ஒற்றைக்கொம்பு காண்டா மிருகமா ?

**ஒற்றைக்கொம்பு காண்டா மிருகங்கள்**





**தாத்தா:** ஆம் அனு. காண்டா மிருகங்கள் மிகவும் அரிதான விலங்கு வகையாகும். இவை **காசிரங்கா தேசியப் பூங்காவில்** பாதுகாக்கப்படுகின்றன

**அனு :** அது எங்கு உள்ளது?

**தாத்தா:** அது **அசாமில்** உள்ளது.

**நாம் அறிந்து கொள்வோம்.**

**காசிரங்கா தேசியப் பூங்காவில்** ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்கள் பாதுகாக்கப்படுகின்றன. உலகில் உள்ள காண்ட மிருகங்களில் மூன்றில் இரண்டு பங்கு அங்கு உள்ளன. தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகளால் அவற்றின் எண்ணிக்கை தற்பொழுது உயர்ந்துள்ளது.



3rd Social Science Unit 2 Term II.indd 93 8/17/2019 2:57:41 PM

செயல்பாடு
நாம் விவாதித்து எழுதுவோம்

விலங்குகள் அல்லது பறவைகள் பெயரை எழுதுக.

| விராலிமலை சரணாலயம் | நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம் | காசிரங்கா தேசியப் பூங்கா | கார்பெட் தேசியப் பூங்கா |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

நாம் அறிந்து கொள்வோம்.

**தமிழகத்தில் உள்ள மூன்று உயிர்க்கோளக் காப்பகங்கள் :**

- நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம்.
- மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம்.
- அகத்தியமலை உயிர்க்கோளக் காப்பகம்.



3rd Social Science Unit 2 Term II.indd 94 8/17/2019 2:57:41 PM

## ஆசிய சிங்கங்கள்





**அனு :** தாத்தா, சிங்கங்கள் பற்றி நீங்கள் கூறவே இல்லையே?

**தாத்தா:** சொல்கிறேன் அனு. **குஜராத்தில் உள்ள கிர் தேசியப் பூங்காவில்** ஆசிய சிங்கங்கள் உள்ளன.

**அனு :** ஆச்சரியமாக உள்ளதே!

**தாத்தா:** பறவைகள், விலங்குகள் மற்றும் பல்வேறு வகையான தாவரங்கள் நமது சுற்றுச்சூழலில் (Environment) முக்கியமான பங்கினை வகிக்கின்றன.

**அனு :** ஆமாம் தாத்தா. நாம் அவற்றைத் துன்புறுத்தக் கூடாது. அவற்றைப் பாதுகாப்பது நமது கடமையாகும்.



3rd Social Science Unit 2 Term II.indd 95 8/17/2019 2:57:43 PM



## கலைச் சொற்கள்

**Environment** : சுற்றுச்சூழல்
**Sanctuary** : சரணாலயம்
**Species** : இனம்



## மீள்பார்வை

- சரணாலயங்கள் அல்லது தேசியப் பூங்காக்களில் விலங்குகளும் பறவைகளும் வேட்டையாடப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.
- உயிர்க்கோளக் காப்பகங்களில் தாவரங்கள், விலங்குகள் மற்றும் பறவைகள் போன்றவைப் பாதுகாக்கப்படுகின்றன.
- வங்காளப் புலிகள், உத்தரகாண்ட்டில் உள்ள கார்பெட் தேசியப் பூங்கா மற்றும் மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனம் தேசியப் பூங்கா, போன்ற இடங்களில் காணப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம், அகத்தியமலை உயிர்க்கோளக் காப்பகம் முதலியவை உள்ளன.
- அசாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்காவில் ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் பாதுகாக்கப்படுகின்றன.



3rd Social Science Unit 2 Term II.indd 96 8/17/2019 2:57:44 PM



# மதிப்பீடு



V5C2Z4

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. கார்பெட் தேசியப் பூங்கா__________இல் உள்ளது.

   அ) உத்தரகாண்ட்      ஆ) பெங்களூரு      இ) சென்னை

2. மேற்குவங்காளத்தில் உள்ள தேசியப் பூங்கா__________

   அ) சுந்தரவனம் தேசியப் பூங்கா

   ஆ) கிர் தேசியப் பூங்கா

   இ) அண்ணா தேசியப் பூங்கா

3. __________சரணாலயம் வேடந்தாங்கலில் உள்ளது.

   அ) சிங்கங்கள்      ஆ) பறவைகள்      இ) புலிகள்

4. தமிழ்நாட்டில்__________உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன.

   அ) மூன்று      ஆ) நான்கு      இ) ஐந்து

5. கிர் தேசியப் பூங்கா__________இல் உள்ளது.

   அ) குஜராத்      ஆ) அசாம்      இ) ஹைதராபாத்

## II. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1 | புலி | - | நீலகிரி |
| 2 | சிங்கம் | - | மேற்கு வங்காளம் |
| 3 | யானை | - | அசாம் |
| 4 | பறவைகள் | - | குஜராத் |
| 5 | ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்கள் | - | வேடந்தாங்கல் |



3rd Social Science Unit 2 Term II.indd 97    8/17/2019 2:57:48 PM

## III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. சரணாலயம் என்றால் என்ன?
2. கார்பெட் தேசியப் பூங்காவில் என்னென்ன விலங்குகள் பாதுகாக்கப்படுகின்றன?
3. நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் உள்ள விலங்குகளின் பெயர்களை எழுதுக.
4. ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் எங்குப் பாதுகாக்கப்படுகின்றன?
5. விலங்குகளிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?

செயல்பாடு

## செயல் திட்டம்

**பின்வரும் சரணாலயம்/ தேசியப் பூங்கா/ உயிர்க்கோளக் காப்பகம் அமைந்துள்ள மாநிலங்களின் பெயர்களை எழுதுக.**

1. வேடந்தாங்கல் பறவை சரணாலயம்
2. கிர் தேசியப் பூங்கா
3. நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம்
4. காசிரங்கா தேசியப் பூங்கா
5. கார்பெட் தேசியப் பூங்கா



3rd Social Science Unit 2 Term II.indd 98 8/17/2019 2:57:49 PM

அலகு 3

# மாவட்ட நிருவாகம்

## கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள் இப்பாடத்தைக் கற்பதன் வாயிலாக,



- மாவட்ட நிருவாகம் எவ்வாறு செயல்படுகிறது என்பதனைப் புரிந்துகொள்வர் .
- மாவட்டத்தில் செயல்படும் பல்வேறு துறைகள் பற்றிப் புரிந்துகொள்வர் .
- மாவட்ட ஆட்சியரின் பொறுப்புகள் பற்றி அறிந்து கொள்வர் .

Z1D6K9

காவேரி வீட்டில் தன் தந்தையுடன் தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்த்து கொண்டிருக்கிறாள் .





3rd Social Science Unit 3 Term II.indd 99 8/21/2019 2:16:30 PM





**அப்பா :** **மாவட்ட ஆட்சியர்** கனமழையின் காரணமாக நாளை முதல் மறு அறிவிப்பு வரும் வரை பள்ளிகளுக்கு விடுமுறை அறிவித்து உள்ளார்.



மாவட்ட ஆட்சியர்

**காவேரி :** ஆஹா.......!
பள்ளிகளுக்கு விடுமுறையா!
மாவட்ட ஆட்சியர்........
**மாவட்ட ஆட்சியர்** என்பவர் யார் அப்பா?





**அப்பா :** **மாவட்ட ஆட்சியர்** என்பவர், மாவட்ட நிருவாகத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர். ஒரு மாவட்ட நிருவாகம் முறையாகவும் அமைதியாகவும் செயல்பட காரணமானவர்.

**காவேரி :** அவர் மட்டுமே அனைத்தையும் கவனிப்பாரா?





3rd Social Science Unit 3 Term II.indd 100 8/21/2019 2:16:34 PM



**அப்பா :** இல்லை காவேரி, **மாவட்ட மருத்துவ அலுவலர், காவல்துறைக் கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர், வருவாய் கோட்டாட்சியர்** போன்ற துணை அதிகாரிகளும் மற்றும் இதர அலுவலர்களும் மாவட்ட ஆட்சியருக்கு உதவுகிறார்கள். இத்தகைய தலைமைப் பொறுப்பாளர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட துறைகளுக்குப் பொறுப்பாகின்றனர். அவர்கள் அனைவரும் மாவட்ட நிருவாகத்தின் அங்கமாவர். இருந்தபோதிலும் மாவட்ட ஆட்சியரே அனைத்து துறைகளும் நன்கு செயல்பட முழு பொறுப்பானவர். மேலும் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைகிறதா என்பதனையும் உறுதிபடுத்திக் கொள்வார்.

S9U8H7







**நாம் அறிந்து கொள்வோம்.**

**மருத்துவ அலுவலர்கள்** மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவ மனைகளுக்கு பொறுப்பாளர்கள் ஆவர். அவர்கள் சுகாதாரத்தைப் பற்றியும், உடல் நலத்தைப் பற்றியும் அறிவுரை வழங்குவார்கள்.

**சிந்தனை செய்**



காவலர்களின் சில கடமைகளைக் கூறுக.

நாம் அறிந்து கொள்வோம்.

**காவல்துறைக் கண்காணிப்பாளர்** மாவட்டத்தின் காவல் துறைக்குப் பொறுப்பாளர் ஆவார். இவர் மாவட்டச் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிக்கிறார். இவருக்கு ஆய்வாளர், துணை ஆய்வாளர் போன்றவர்கள் உதவுகிறார்கள்.

அவசர காலங்களில் காவல் துறையைத் தொடர்புகொள்ள 100 என்ற எண்ணைத் தொலைபேசியில் அழைக்கவும்

செயல்பாடு

நாம் எழுதுவோம்

விடுபட்ட இடங்களைக் குறிப்புகளைக் கொண்டு நிரப்புக.

- மாவட்டத்தின் நிருவாகத் தலைமை — மா __ ட் __ __ ட்சியர்
- சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பவர் — கா __ ல __
- உடல்நலம் குறித்த அறிவுரை வழங்குபவர் — __ ருத் __ வ __
- அறநெறிகளைப் போதிப்பவர் — ஆ __ ரி __ __



3rd Social Science Unit 3 Term II.indd 102 8/21/2019 2:16:36 PM

**காவேரி :** அப்பா, மாவட்ட ஆட்சியர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?





**அப்பா :** **இந்திய ஆட்சிப் பணி** (I.A.S.) அதிகாரிகள் U.P.S.C (மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்) மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த **இந்திய ஆட்சிப் பணி** (I.A.S.) அதிகாரிகள் மாவட்ட ஆட்சியர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.




மாவட்டக் கல்வி அலுவலகம், மாவட்டத்தின் கல்வி மற்றும் நிர்வாகம் சார்ந்த நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகிறது.

**நாம் அறிந்து கொள்வோம்.**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Tamil Nadu Public Service Commission– TNPSC)** மாநிலப் பொது சேவைப் பணியாளர்களை நியமிக்கிறது.

**காவேரி :** அப்பா, மாவட்ட ஆட்சியரைப் பற்றி மேலும் கூற முடியுமா?





**அப்பா :** **மாவட்ட ஆட்சியர்** மாவட்டத்தின் வருவாய் துறைக்கும் தலைவர் ஆவார்.

- மாவட்ட ஆட்சியருக்குச் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்க காவல் துறை உதவுகிறது. **காவல்துறைக் கண்காணிப்பாளர்** மாவட்ட ஆட்சியரின் உத்தரவுக்கு இணங்க பணிபுரிவார். அவர்கள் மாவட்ட ஆட்சியருக்கு மாவட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்த தகவல்களை அவ்வப்போது அளிப்பர்.
- மாவட்ட ஆட்சியர் உள்ளாட்சி அமைப்புகளான மாவட்ட வாரியம், கிராம பஞ்சாயத்து மற்றும் நகராட்சிக் குழுக்கள் போன்றவற்றை மேற்பார்வையிடுவார் .
- இயற்கைப் பேரிடரின் (Natural disaster) போது தக்க நடவடிக்கைகள் எடுப்பார்.
- அரசின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பார்.
- நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைகின்றனவா என்பதனை மாவட்ட ஆட்சியர் உறுதிபடுத்திக் கொள்வார்.

**காவேரி :** சரி அப்பா! நான் இவ்விவரங்களை என் வகுப்பில் பகிர்ந்து கொள்வேன். என் ஆசிரியரிடம் இருந்தும் நண்பர்களிடம் இருந்தும் நமது மாவட்டத்தைப் பற்றிய விவரங்களை மேலும் அறிந்து கொள்வேன்.





## கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| Natural disaster | : | இயற்கைப் பேரிடர் |
| Personnel | : | பணியாளர்கள் |



3rd Social Science Unit 3 Term II.indd 104 8/21/2019 2:16:39 PM

## செயல்பாடு
### நாம் எழுதுவோம்

**சரியா/தவறா எழுதுக.**

- மாவட்ட ஆட்சியர் இயற்கைப் பேரிடரின் போது தக்க நடவடிக்கைகள் எடுப்பார். (        )
- மாவட்ட ஆட்சியர் உள்ளாட்சி அமைப்புகளை மேற்பார்வையிடமாட்டார். (        )
- காவல்துறைக் கண்காணிப்பாளர் திட்டங்கள் மக்களை சென்றடைவதை உறுதி செய்யமாட்டார். (        )
- மாவட்ட ஆட்சியர் பல்வேறு துறைகளின் தலைமைகளோடு இணைந்து மாவட்ட நிருவாகம் அமைதியாக நடைபெற பணியாற்றுவார். (        )

## மீள்பார்வை

- மாவட்ட ஆட்சியர் மாவட்ட நிருவாகத்தின் தலைமைப் பொறுப்பு வகிப்பார்.
- மாவட்டம் நன்கு செயல்பட மாவட்ட ஆட்சியர் பொறுப்பாளர் ஆவார்.
- மாவட்ட நிருவாகம் என்பது காவல்துறை, மருத்துவத்துறை, வனத்துறை மற்றும் கல்வித்துறை போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.
- மாவட்ட ஆட்சியர் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்க காவல்துறையின் உதவியை நாடுவார்.
- இயற்கைப் பேரிடரின் போது, மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்.



3rd Social Science Unit 3 Term II.indd 105 8/21/2019 2:16:40 PM



# மதிப்பீடு



## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

W3S9P6

1. மாவட்ட நிருவாகத்தின் தலைவர் __________ ஆவார்.
   அ) மாவட்ட ஆட்சியர்
   ஆ) நீதிபதி
   இ) காவல்துறைக் கண்காணிப்பாளர்

2. அரசாங்க மருத்துவமனைகளுக்கு __________பொறுப்பாளர் ஆவார்.
   அ) காவல்காரர்கள் ஆ) மருத்துவ அலுவலர்கள் இ) ஓட்டுநர்கள்

3. காவல்துறை__________பாதுகாக்கிறது.
   அ) உடல்நலம் ஆ) வனம் இ) சட்டம் மற்றும் ஒழுங்கு

4. __________மாவட்டத்தின் கல்வித்துறையின் செயல்பாட்டை கண்காணிப்பார்.
   அ) வன அலுவலர்
   ஆ) முதன்மைக் கல்வி அலுவலர்
   இ) மருத்துவ அலுவலர்

5. மாவட்டத்தில் சுகாதாரத்தைப் பேணுவதற்கு __________ அறிவுரை வழங்குவார்.
   அ) மருத்துவ அலுவலர் ஆ) வன அலுவலர் இ) வருவாய் துறைத் அலுவலர்

## II. சரியா/தவறா எழுதுக.

1. மாவட்ட ஆட்சியர் UPSC நடத்தும் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார். (............)

2. ஆசிரியர் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைகிறதா என்பதனை கண்காணிப்பார். (............)

3. முதன்மைக் கல்வி அலுவலர் கல்வித்துறையைக் கண்காணிப்பார். (............)

4. காவல் அலுவலர்கள் அரசாங்க மருத்துவமனைகளுக்குப் பொறுப்பாளர்கள் ஆவர். (............)

5. வனத்துறை அலுவலர் வனத் துறைக்குப் பொறுப்பாளர் ஆவார். (............)



3rd Social Science Unit 3 Term II.indd 106 8/21/2019 2:16:44 PM

## III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. மாவட்ட நிருவாகத்தின் தலைமை யார்?
2. மாவட்ட ஆட்சியர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?
3. மாவட்டத்திலுள்ள ஏதேனும் மூன்று துறைகளின் பெயர்களை எழுதுக.
4. மாவட்டத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கை யார் பாதுகாக்கிறார்கள்?
5. மருத்துவ அலுவலரைப் பற்றி எழுதுக.

**செயல்பாடு**

## செயல் திட்டம்

**மாவட்டத்தில் செயல்படும் பல்வேறு துறைகளின் பெயர்களை எழுதி வருக.**

# வகுப்பு III கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் (பருவம் 2, தொகுதி 2) பாடநூல் மேலாய்வாளர்கள் மற்றும் ஆசிரியர்கள்

### கல்வி ஆலோசகர்

**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடதிட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 06.

### பாடநூல் ஒருங்கிணைப்பாளர்

**முனைவர் கே. எஸ். மொழியரசி**
முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்.
கீழப்பழுவூர், அரியலூர்

### பாட ஒருங்கிணைப்பாளர்

#### கணிதம்

**கே. ரேவதி**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
பெரம்பலூர்.

நா. வி. பூர்ணிமாதேவி
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
பழையனூர், திருவண்ணாமலை.

#### அறிவியல்

**தெ. அசோக்**
முதுகலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
பொன்னேரி, திருவள்ளூர்

#### சமூக அறிவியல்

**சா. மகேஸ்வரி**
முதுகலை ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
விழுப்புரம்.

### கலை மற்றும் வடிவமைப்பு குழு

#### பக்க வடிவமைப்பு

ராஜேஷ் தங்கப்பன்
சந்தியாகு ஸ்டீபன்
ஏசு ரத்தினம் / பிரசாந்த் சி
பூர்ண சந்திரன் தி க
சகாய அரசு.ரா / ஸ்ரீதர்
அடைக்கல ஸ்டீபன் சி
ஜான் ஸ்மித் / பக்கிரி

### In–House – QC

காமாட்சி பாலன் ஆறுமுகம்
அருண் காமராஜ் பழனிசாமி
கி. ஜெரால்டு வில்சன்

### அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

### ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

## கணிதம்

### மேலாய்வாளர்கள்

**முனைவர் இராமானுஜம்**
பேராசிரியர், கணித அறிவியல்
நிறுவனம், தரமணி, சென்னை.

**ஆர். கிருத்திகா**
ஆராய்ச்சி நிறுவனம்
அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்,
பெங்களூரு.

### பாட நூலாசிரியர்கள்

**ஆர். செல்வபிரதா**
ஈஷா வித்யா இரமணியம்
மெட்ரிக் மே. நி. பள்ளி
வனவாசி மேட்டூர் சேலம்

கே. பிருந்தா
ஈஷா வித்யா இரமணியம்
மெட்ரிக் மே. நி. பள்ளி
வனவாசி மேட்டூர் சேலம்

**பி. கல்பனா**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆலம்பாக்கம், புல்லம்பாடி
ஒன்றியம், திருச்சி.

**சி. வெங்கடேசன்**
இடைநிலை ஆசிரியர்,
அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்ப
பள்ளி, வண்டராயன் கட்டளை,
அரியலூர்.

**கே. புஸ்பராஜ்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
நரசிங்கம் பாளையம், அரியலூர்.

**எஸ். கே.சிவகுமார்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
எடையூர், அரியலூர்.

**சி. தொட்டியாதன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,
நமன்குணம், அரியலூர்.

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

**இரா. ஜெகநாதன்,**
இடைநிலைஆசிரியர்,
ஊ.ஒ.ந.பள்ளி, போளூர்,
திருவண்ணாமலை.

**ம.முருகேசன்**
பட்டதாரிஆசிரியர்
ஊ.ஒ.ந.பள்ளி,முத்துப்பேட்டை,
திருவாரூர்.

**சூ. ஆல்பர்ட் வளவன் பாபு,**
பட்டதாரிஆசிரியர்
அ.உ.பள்ளி, பரமக்குடி,
இராமநாதபுரம்.

## அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**ஏஞ்சலின் ரூபி**
உதவி பேராசிரியை,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

**முனைவர் க. சிந்தனையாளன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர் நிலைப் பள்ளி,
பெரியார் நகர், நந்தம்பாக்கம்,
காஞ்சிபுரம்.

### பாட நூலாசிரியர்கள்

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்
சென்னை.

**ந. கோபி**
வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்,
நெமிலி ஒன்றியம், வேலூர்.

**க.விஜயராஜ்குமார்,**
முதுகலை ஆசிரியர்,
ஈஷா வித்யா இன்ஃபொசிஸ்
மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
தருமபுரி.

**ச.ஜாண்ஜேம்ஸ்,**
முதுகலை ஆசிரியர்,
ஈஷா வித்யா மெட்ரிக் மே.நி.பள்ளி,
மாடவப்பள்ளம், கடலூர்.

**ம. மரியதாஸ்**
இடைநிலை தலைமை ஆசிரியர்
ஊ.ஒ. தொ.பள்ளி, பளிங்காநத்தம்
திருமானூர், அரியலூர்.

**கே. கணேசன்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
வெள்ளை பிச்சாம்பட்டி, திருச்சி.

**கே. நிர்மலா மேரி**
இடைநிலை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
ஆரூர், சங்கராபுரம், விழுப்புரம்.

### மொழி பெயர்ப்பாளர்

**தெ. அசோக்**
முதுகலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
பொன்னேரி, திருவள்ளூர்

### ஓவியர்

**பா. இராமர்**
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
காமராஜ் நகர் ஆவடி திருவள்ளூர்

## சமூக அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**பெ. பாலமுருகன்,**
**முதுகலை ஆசிரியர்**
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
தம்மம்பட்டி, சேலம்.

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்
சென்னை.

### பாட நூலாசிரியர்கள்

**சு. கோமதி மாணிக்கம்,**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
பழைய பெருங்களத்தூர்,
காஞ்சிபுரம்.

**சா. மகேஸ்வரி**
முதுகலை ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
விழுப்புரம்.

**செ . அபிராமி**
இடைநிலை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய ந.நி.பள்ளி,
முத்துவாஞ்சேரி, டி–பலூர்,
அரியலூர்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



3rd Social Science Unit 3 Term II.indd 108 8/21/2019 2:16:45 PM